**மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டம் - பிரிவு I - 2018**

----------------------------------------------------------------------------------------

மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டத்தின் - பிரிவு I இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

2015 ஜூலை 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திற்கு வந்த போதான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம், மத்திய அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகள் முறையே தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிறைவேற்றவும் அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தன. மத்திய அதிவேபாதையின் நிர்மான வேலைகள் 04 பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதிவேகப்பாதையின் கடவத்த தொடக்கம் மீரிகம வரை 36.59 கி.மீ இன் நிர்மான வேலைகள் பிரிவு I இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்பினை அதிகரித்தல், போக்குவரத்து நேரம், போக்குவரத்து நெரிசல், வாகன செயற்பாடு மற்றும் பராமரிப்பு கிரயம் மற்றும் சுற்றுச்சூழல் மாசடைவு போன்றவற்றை குறைக்கக்கூடிய முன்னுள்ள அதிவேகப்பாதை வலையமிப்பினை 36.59 கி.மீ இனால் நீடிப்பதனூடாக கடவத்தை தொடக்கம் மீரிகம வரையான ஒரு அதி வேகப்பாதையினை நிர்மானிப்பதனூடாக மார்க்கங்களிடையே ஒரு உயர் இயக்கத்தினை உறுதி செய்தல் செயற்திட்டத்தின் நேக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 196,174 மில்லியனானதுடன் செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 29 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஒகஸ்ட் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தய-

ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ------------------------------------ | ------------ | --------------------------- | ---------------------- |
| (அ) | செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிவில் வேலைகளின் உண்மைத்தன்மை மற்றும் முழுமை என்பன இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தினை கையளிக்காததன் காரணமாக கணக்காய்வின் போது அறிந்து கொள்ள முடியாமலிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் குறைமதிப்பீடு. | உடன்பட்டனர். | செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட உண்மைக்கிரயம் மற்றும் பொறுப்புக்கள் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் 2016 திசெம்பர் 26 இலிருந்து அமுல்படுத்தப்பட்டிருப்பினும், சிவில் வேலைகள் மீதான செலவினங்கள் செயற்திட்டத்தின் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் உண்மை சொத்து மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் குறைமதிப்பீடு. | சிவில் வேலைகளின் கிரயத்தை கணக்கிடாததற்கான முறையான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br>1. பூர்வாங்கல் வேலைகளை ஒப்பந்ததாரர் உடன்படிக்கையின் பிரிவு (5) இன் பிரகாரம் அவரது சொந்த நிதியில் அமுல்படுத்தியிருந்தார்.<br>2. ஆலோசகர்/வேலை வழங்குனர் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டிராததாக செய்யப்பட்ட வேலையை உறுதிப்படுத்த முடியாது.<br>3. ஒப்பந்தத்தின் ஆரம்பிப்பிப்பு அறிவிக்கப்பட்டிராவிடில் எந்த வேலைகளும் உறுதிப்படுத்த முடியாமலிருக்கும். | செயற்திட்டத்தின் உண்மைக்கிரயம் மற்றும் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் என்பன கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 4. உடன்படிக்கையின் பிரிவு (8) இன் பிரகாரம், ஆரம்பிப்பதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் நான்கு பிரிவுகள் தொடர்பான சாத்தியவள கற்கைக்காக மொத்தமாக ரூபா 2,193 மில்லியன் ஏற்பட்டிருப்பினும், அச்செலவில் உரிய பங்கு இச் செயற்திட்டத்திற்கு பிர்த்தொதுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் செயற்திட்டத்தின் செலவினம் அப்பெறுமதியில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | இச் செயற்திட்டத்திற்கான இச் செலவுகளின் உரிய பங்கினை கணக்கீடு செய்வதற்கு அமைச்சின் அறிவுறுத்தலிற்காக நாங்கள் காத்து கொண்டிருக்கின்றோம். | இச் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட உண்மையான கிரயம் மற்றும் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் என்பன கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ---------------------- | ----------------------------- | ------------- | ----------------------- | --------------------- |
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கை இல 1/2016 | செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் நேரத்தில் கடன் வழங்குனரிடமிருந்து நிதிகளினை பெற்றுக் கொள்வதற்காக ஒரு உடன்படிக்கை அல்லது குறைந்தது ஒரு உத்தரவாதம் அல்லது நிச்சயதன்மை காணப்பட வேண்டி இருந்த போதிலும், செயற்திட்டத்தின் முகாமை அவ்வாறான செயன்முறையை பின்பற்றியிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டமானது 3 வருடங்களாக நிதியளிப்பதற்கு ஒரு கடன்வழங்குனர் இல்லாமல் இன்னும் செயலாற்றலில் உள்ளது. இன்நிலமையானது விலை விரிவாக்கம் | நிர்மானத்தை ஆரம்பிக்காமல் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பராமரிப்பிற்காக தேவையற்ற கிரயங்கள் ஏற்படக்கூடும். | கடன் உடன்படிக்கையானது 2019 மார்ச் 22 இல் கையொப்பமிடப்பட்டிருந்தது . | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் நிதி உடன்படிக்கையானதும் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் போது காணப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மற்றும் மேலதிக மேந்தலைகள் காரணமாக செயற்திட்டத்தின் கிரயத்தில் பாரிய அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடும். | | | |
| (ஆ) | தேசிய பாதீட்டின் 2015 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இல 06/2015. | தனிப்படையான வெளியீடுகளை அடயாளப்படுத்துவதற்கு ஒரு நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளின் மிருதுவான செயற்பாட்டிற்கான முக்கிய பாதை என்பன 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் உண்மையான செயலாற்றலை மதிப்பிட முடியாமல் காணப்படுவதுடன் தேவையற்ற தாமதங்கள் மற்றும் கிரயங்கள் ஏற்படலாம். | உடன்படுகின்றேன். நாங்கள் கவனத்திலெடுத்துள்ளோம். விரைவில் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை தயாரிப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறுகள் | கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| அதிவேகப்பாதை நிர்மானத்தின் வடிவமைப்பு வேலைகள். | வடிவமைப்புக்கள் மற்றும் கட்டுமான மேற்பார்வை ஒப்பந்தம் என்பன இலங்கை வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட நிதி உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 2,549 மில்லியன் கிரயத்தில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், பூலோக புலனாய்வுகள், விபரமான கட்டமைப்பு வடிவமைப்புக்களின் வடிவமைப்பு மற்றும் ஸ்பைலிங் பரிசோதனை என்பன மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | தேவையற்ற தாமதங்கள் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | வடிவமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொதி 1 மற்றும் பொதி 2 என்பன பெறுகை வழிகாட்டிகளை பின்பற்றாமல் 2015 ஜூலை 06 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை முடிவின் அடிப்படையில் ரூபா 158,386 மில்லியனிற்கு முறையே 2016 ஜூன் 20 மற்றும் 2015 ஆகஸ்ட் 04 இல் ஒரு சீனா நிர்மான கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | வைப்பிடப்பட்டிராத ஒப்பந்த வழங்கலானது செயற்திட்டத்தின் தரத்தினை பாதிக்கலாம். | இது ஒரு கோரப்படாத வேண்டுகோலாக இருந்ததிலிருந்து ஒப்பந்த வழிகாட்டி பிரிவு II இன் கொள்கைகள் ஒப்பந்ததாரரினை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் வேலைகளை நிர்மானிப்பு காலத்தின் போது கண்கானிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆரம்பத்தில், செயற்திட்டமானது பொதுஹெர தொடக்கம் ரம்புக்கன்ன வரையான செயற்திட்டத்தின் பிரிவு 3 இனை நிர்மானிப்பதற்காக சீனாவின் உலோகவியல் கூட்டுமுயற்சியுடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்தது. இருப்பினும், அவர்கள் உடன்பட்ட ஆறு மாதகாலத்திற்குள் கடனை வழங்க முடியாதிருந்ததனால் அது ஒரு வெற்று ஒப்பந்தமாக ரத்துசெய்யப்பட்டிருந்தது. எனவே பிரதமர் அலவலகத்தினால் வெளியிடப்பட்ட 2015 ஜூலை 6 ஆம் திகதிய இல 15/1021/602/040 அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம், பெறுகை நிறுவனமானது பெறுகை செயன்முறையினை பின்பற்றாமல் பகுதி 3 இன் ஆரம்பகட்ட நடவடிக்கைகளின் போது ஒப்பந்ததாரரினால் ஏற்படுத்தப்பட்ட கிரயங்களை ஈடு செய்வதற்கான நிர்வாக மத்திய அதிவேகப்பாதையின் பகுதி 1 வழங்கப்பட்டிருந்தது. | வைப்பிடப்பட்டிராத ஒப்பந்த வழங்கலானது செயற்திட்டத்தின் தரத்தினை பாதிக்கலாம். | இது ஒரு கோரப்படாத வேண்டுகோலாக இருந்ததிலிருந்து ஒப்பந்த வழிகாட்டி பிரிவு II இன் கொள்கைகள் ஒப்பந்ததாரரினை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் வேலைகளை நிர்மானிப்பு காலத்தின் போது கண்கானிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஆரம்பத்தில் பெறுகை நிறுவனம் பொதி 1 இன் கடவத்த தொடக்கம் கொசின்ன வரையான நிர்மானத்தினை ஓசிஎச் 3 இன் சேமிப்பின் கீழ் செயற்படுத்த தீர்மானித்திருந்ததுடன் இறுதியில் கடவத்தை இடமாறல் மற்றும் பொதி 1 | நிதி உடன்படிக்கையுடனான நிர்மானத்தின் திட்டமிடலின் பற்றாக்குறை காரணமாக தேவையற்ற விதத்தில் | உடன்பட்டனர். இரண்டாவது வேண்டகோளில் அமுல்படுத்தல் ஓசீஎச் 3 செயற்திட்டம் பூரணமாக பூர்த்தியாகும் வரை முடிவுபெறாமல் இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நிதி உடன்படிக்கைகளுடனான ஒரு நிர்மான திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலிருந்து 0.5 கி.மீ என்பவற்றை பூர்த்திசெய்ய தீர்மானித்திருந்தனர். இருப்பினும், அது கூட ஓசிஎச் 3 இன் சேமிப்பின் பற்றாக்குறை காரணமாக அமுல்படுத்தப்படாமல் இருந்தது. | செயற்திட்ட கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | | |
| (ஈ) | ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கமானது வேலைகளை அமுல்படுத்துவதற்காக சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து கடனொன்றை பெற நோக்கமாக கொண்டிருந்தது, வேலைகளுடன் சம்மந்தப்பட்ட கடன் உடன்படிக்கையானது இலங்கை அரசாங்கம் மற்றும் சீனாவின் எக்சிம் வங்கிக்கும் இடையே கடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 365 நாட்காட்டி நாட்களிற்கு முன்னர் கையொப்பமிடப்பட்டிராவிடின் இவ் ஒப்பந்தமானது தானாகவே நிறுத்தப்படும். உடன்படிக்கையானது காலாவதி காரணமாக பொதி 1 இற்காக 06 தடவைகளும் பொதி 02 இற்காக 08 தடவைகளும் நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அவ்வாறான நிதி ஆபத்துக்களை குறைக்க செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதங்கள் செயற்திட்டத்தின் கிரயத்தை தேவையற்ற விதத்தில் அதிகரிக்கும் சாத்தியம் | 2019 மார்ச் 02 இல் கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதிலிருந்து எவ்வித ஆபத்தும் இல்லை. | எதிர்பார்க்கப்பட்ட நிதி உடன்படிக்கைகளுடன் தொடர்புபட்ட செயல் திட்டத்தினை அமுல்படுத்துவதை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம், ஒரு முறையான ஒப்பந்தத்தினை நிறுவ 3 கூறுகள் திருப்திப்படல் வேண்டும். ஆவைகள் வழங்கள், ஏற்றுக்கொள்ளல் மற்றும் சட்டபூர்வமாக இணைக்கப்பட்ட உறவு என்பனவாகும். இருப்பினும், ஏற்றுக்கொள்ளல் கடிதமானது தொழில்தருனரால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, பொதி 1 மற்றும் பொதி 2 இற்காக முறையே 2016 ஜுன் 20 மற்றும் 2015 ஓகஸ்ட் 04 இல் செய்யப்பட்டு உள்வாங்கப்பட்ட உடன்படிக்கைகள் ஒப்பந்ததாரர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கிடையில் ஒரு முறையான ஒப்பந்த உடன்படிக்கைகளாக காணப்படவில்லை. எனவே, ஒப்பந்ததாரர் 2018 ஆம் ஆண்டு இறுதிவரை ஏலபடிவத்தின் வேண்டுகோள்படி | செயலாற்றல் பத்திரம் இல்லாததன் காரணமாக மேலதிக ஆபத்து ஏற்படக்கூடும். | பொதுவாக, ஏற்றுக்கொள்ளல் கடிதம் ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்படும் ஒரு ஆரம்ப நிலை உடன்படிக்கையானதுடன் அது ஒப்பந்த உடன்படிக்கையின் ஒரு பகுதி ஆகும். ஏற்றுக்கொள்ளல் கடிதத்தினை விட்டுவிட்டு ஒப்பந்த உடன்படிக்கை நேரடியாக கையொப்பமிடமுடியுமாயின் அது மேலும் சட்டபூர்வமானது. குறிப்பிட்ட செயலாற்றல் காலம் இல்லாததால் செயலாற்றல் பத்திரம் தேவை இல்லை. | ஒப்பந்த நிபந்தனைகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் செயலாற்றல் பத்திரத்தினை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயல்திறன் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் முறையான செயலாற்றலிற்கான செயலாற்றல் பாதுகாப்பு ஒப்பந்ததாரர் அவரது சொந்த கிரயத்தில் பெறவேண்டி இருப்பினும் செயற்திட்டமானது அளவைப்படடியலில் ஒரு தனியான உருப்படியாக உள்ளடக்கியிருந்தமை மேற்கூறிய தேவைப்பாட்டிற்கு முறனாக காணப்பட்டது. புறநடையான செலவினங்களின் பெறுபேறாக ரூபா 64 மில்லியன் மற்றும் ரூபா 741 மில்லியன் முறையே ஒப்பந்தப் பொதி 1 மற்றும் 2 இற்காக அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே இது எதிர்காலத்தில் ஒப்பந்ததாரரிற்கு ஒரு தேவையற்ற நன்மையினை கொடுக்கலாம். | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகள். | ஒப்பந்த நிபந்தனைகள் செயலாற்றல் பாதுகாப்பினை அவரது சொந்த செலவில் பெற வேண்டி இருப்பினும் பீஓகியுவ் ஒப்பந்ததாரரினால் ஏலமிட வேறான ஒரு ஏற்பாட்டினை வழங்கியிருந்தது. மேற்கூறிய விடயத்திற்கு பின்னுள்ள காரணம் ஒப்பந்ததாரர் செயலாற்றல் பத்திரத்திற்கான கிரயத்தினை வேறாக பெற்றுக்கொள்ள அனுமதிக்காவிடின், மறைக்கப்பட்ட கிரயங்களில் உள்ள விகிதங்கள் மற்றும் பேச்சுவார்த்தைக்க உட்படுத்தமுடியாத அசாதாரணமாகக்கூடிய விகிதங்கள் என்பனவற்றை அவை உள்ளடக்கக்கூடும். | மேலதிக கொடுப்பனவுகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது சீஈபி 1 இன் கீழ் வேலை செய்யும் பொறியியலாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், மீளவழங்கள் உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் போன்ற பதவிகளிற்காக முறையான குறிப்பு விதிமுறைகள் (டீஓஆர்) தயாரிக்கப்பட்டு வழங்கியிருக்கவில்லை. எனவே, அவர்களது செயலாற்றல் மற்றும் செயற்திட்டத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்பின் அளவு என்பவற்றை கண்காணிக்க முடியாது. | திறனற்ற ஊழியர்களின் ஈடுபாடு காரணமாக நட்டங்களிற்கு சாத்தியம். | அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் அவர்களை உரிய பதவிக்கு நியமிக்கும் போது ஏற்கனவே நாங்கள் வேலைப்பட்டியல் வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் அவர்களது செயலாற்றல் மற்றும் செயற்திட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பினை மதிப்பிட ஒரு முறையினை பின்பற்றுவோம் என நம்புகிறோம். | முறையான குறிப்பு விதிமுறை தேவையானதுடன் அதனுடனான செயலாற்றல் மதிப்பீடும் செய்யப்படல் வேண்டும். |